

# கரவா ஒளிச்சுடர்...!

கவிஞர் கவிவளவன்

எழுத்துக்களம் வெளியீட்டகம்

# கரவா ஒளிச்சுடர்...!

கவிஞர் **கவிவளவன்**

**எழுத்துக்களம்** வெளியீட்டகம்
செம்பாக்கம், **சென்னை**–600 073

**உரிமை:** ஆசிரியருக்கே!
முதற் பதிப்பு நவம்பர் **2020**
திருத்தங்களுடன் March 2021
**© பதிப்புரிமைப் பெற்றது!**

Please visit **www.thadaakam.co.in.** a web magazine

**மின்நூல்—ரூ10.00/அன்பு**
**தாள் நூல்—அச்சில்**

ஒளியச்சுக் கோவை, நூல் வடிவம்
K P Asokan, M.A., M.Sc., M.B.A., M.C.A., LLB

இது ஓர்
**எழுத்துக்களம்** வெளியீடு
22, ஆர்.பி. அவின்யூ முதல் தெரு
**செம்பாக்கம், சென்னை – 73.**
அலைபேசி : 99400 61280
www.ezhuththukkalam.co.in
www.epublish.co.in

வணக்கம்,

எழுத்துக்கலை ஒரு தவம். எழுதுதல் இறைவன் அளிக்கும் தனிக் கொடை. அதனினும் கவிதை புனைதல், பெருங்கொடை. சிந்தை யோட்டங்கள், சொற்களாய்க் குவியும், அவை மனக் காட்சியின் படிமங்கள். வெவ்வேறு, காலக் கட்டங்களில், தோன்றிய பதிவுகளை நூல் வடிவம் காண முற்பட்ட போது, சின்னஞ் சிறிசுகளாய், இருந்தனவற்றையும், ஒரு சிறுவடிவ கவிதைத் தொகுதியாக்கும் செயலே இந்நூல். என்றாவது, எந்நிகழ்விலாவது, பரிசு நூலாக வழங்கும் நிலைப்பாட்டின் செயல்வடிவமே இது. இவை ஒரு 40 ஆண்டுகாலத் தொடர் நிலையின், படிமம். வழக்கம்போல், நூல் வடிவம் செய்து வெளியிடும், என்னுடைய இல்லாளுக்கும் நன்றி! படித்துச் சுவைப்போருக்கும் நன்றி!!.

**சென்னை**—73

**நாள்**: 20-11-2020

**அன்புடன்**,

**கவிவளவன்**.

# ஆசிரியரின் பிற நூல்கள்!

## தாள் நூல்

1. அழியாச் சொப்பனங்கள் - கவிதைகள் (மரபு மீறல்) ரூ.75/-
2. மனம் பூத்த மலர்கள் - கவிதைகள் (மரபு மீறல்) - அச்சில்

## மின்நூல்

3. நவீன ஆத்திசூடி - விலை - அன்பு
4. முகநூல் சுவடுகள்- தொகுப்பு- விலை - அன்பு
5. வித்தாகும் விழுதுகள் - கவிதைகள்(மரபின் வழியில்) ரூ.40/-
6. சிந்திய முத்துக்கள்– கவிதைகள் (குறுநூல்) ரூ.10/அன்பு
7. சின்னச்சின்னப் பூக்கள்-கவிதைகள் (குறுநூல்) ரூ.10/அன்பு
8. சிந்தனைக் கோலங்கள்—கவிதைகள் (மரபின் வழியில்) - ஒளி அச்சில்
9. தேடிய கலன்கள்—கவிதைகள்(குறுநூல்) - ஒளி அச்சில்
10. மனக் கீற்று—கவிதைகள் (குறுநூல்) ஒளி அச்சில்
11. முகவரி தேடும் அகவரிகள் - கவிதைகள் (மரபு மீறல்) - ஒளி அச்சில்
12. விழுமிய வேர்கள்-(மரபின் வழியில்) ஒளி அச்சில்
13. கண்டதும் கேட்டதும்- கட்டுரை(ஒளி அச்சில்)
14. தீர்க்க தரிசனம்—கட்டுரை(ஒளி அச்சில்)
15. ஒளிதரும் ஓசைகள்-(இசைப் பாடல் - ஒளிஅச்சில்)

செங்கோட்டைப் பாசஞ்சர்
சிறுகதைகள் (அச்சில்)

இவற்றுடன்,
**கனவின் ஓசைகள்**
பதிவிறக்க—ரூ 45/-
அஞ்சலில் ரூ 85/-

# அவன்!




உள்ளம் பிறந்தொரு ஒலிவடிவாகி;
உலகம் நிறைந்தொரு ஒளிவடிவாகி;
கள்ளம்பேணா மனத்துள் நாளும்,
காட்சியுமாகும் பெருவடிவாகி,
உள்ளம் விரும்பிய உருவினிலெல்லாம்;
உயிர்த்தெழுந்தேகும் திருவடிவாகிப்,
பள்ளமும் மேடும் பாய்ந்திடும் புலியும்,
பொல்லாதவரும் புவியினை ஆள;
உள்ளம் நிறைந்தோர் உலகினில் சிலரே;
என்றே ஆயினும், யாவையும் நிறைவாய்;
அள்ளியே அணைக்கும் அறிவினில் பெரியோன்;
வல்லோன் அன்பின் வடிவினன் தானே!

**08-04-1997**

==#==

# யான்!

வாடாத மலர்களின் வசந்தம் நான்!
தேடாத இசைகளின் பண்ணும் நான்!
ஆடாத இலைகளின் காற்றும் நான்!
மூளாத அன்பின் முகிழ்வும் நான்!
துயிலாத கண்களுக்குள் ஒளியும் நான்!



பாடாத ஒலியசைவின் பதிவும் நான்!
நாடாத உறவுகளின் நண்பன் நான்!
கூடாத நல்லுறவின் குயவன் நான்!
போராடாப் பெருமனத்தின் புதையல் நான்!

11.09.2016

# கனவு!



மனத்தை ஆளும் காலத்தின் வடிவம்!
நாளைய நினைவில் நர்த்தனம் புரியும்!
ஈரத்தின் ஆழம்; எழுச்சியின் தோற்றுவாய்!
மகிழ்வுடன் பொதிகளாய்; மனத்தை நிறைக்கும்!
வாழ்வின் தேடலில், சுமையைக் குறைக்கும்!
எண்ணங்களை வாழ்விக்கும் காலத்தின் மருந்து!

==0==



# பற்றுவேன் யான்!



போற்றுதலும் வேண்டேன்!
தூற்றுதலும் செய்யேன்!
மாற்றமில் வாழ்வில்
மறுபடியும் பிறக்கேன்!
தோற்றமோ; மறைவோ;
தொல்லையாம் இப்பிறப்பில்,
தூற்றுதலும் வேண்டேன்!
போற்றுதலும் காணேன்!
காற்றதுவும் நெஞ்சக் குழியில்,
கனலும் காலம் வரையில்;
சாற்றுவேன் பரம்பொருளாம்;
கண்ணன் திருவடியே!

==0== **07-11-2019**

# அத்தி வரதர்!



அத்திமரம் தனிலே அழகாய் அரங்கேறி,
ஆழநீர்க் குளந்தனிலே, முகிழ்ந்திருந்து;
முத்தாக நாற்பதாண்டுக் காலம் முடிந்து,
எழுந்துவந்து வரமருளும் வரதா !
வித்தகா பெருமாளே, எமையாளும் நிறையே!
அச்சுதா, அனந்தா, அரங்கா, வேங்கடவா!
மெத்தசீர்க் கண்ணனே அல்லிக்கேணி அமுதே!
வியனுலகில் யாம் பெற்றோம் பேரின்பமே!
02-07-2019

## ஈசனடிப் போற்றி! போற்றி!!



ஓம்! அருளினில் நிறைந்தாய் போற்றி!
ஓம்! ஆனந்தக் கடலே போற்றி!
ஓம்! இகத்தின் பொருளே போற்றி!
ஓம்! ஈடில்லா நிறையே போற்றி!
ஓம்! உருவில்லாத் தேவே போற்றி!
ஓம்! ஊழ்வினைக் களைந்தாய் போற்றி!
ஓம்! எங்களின் பரமனே போற்றி!
ஓம்! ஏற்றமேத் தருவாய் போற்றி!
ஓம்! ஐயனே அருளே போற்றி!
ஓம்! ஒப்பிலா மாமணியே போற்றி!
ஓம்! ஓங்காரப் பொருளே போற்றி!
ஓம்! ஔடதமானாய்ப் போற்றி! போற்றி!!
ஓம்! அ.ஃ.றிணையும் நிறைத்தாய் போற்றி
ஓம்! வல்லோனே! பரம்பொருளே! போற்றி! போற்றி!! 18-10-2019

# தேடுவோம் உலகியல்!....



ஆயிரம் கனவுகள் அகத்தில் சுமந்து,
தீயிடும் எண்ணங்கள் இகத்தில் துறந்து;
போயிடும் நாள்களில் புதுமைகள் தேடி;
சேயுடன் சேர்ந்து; சிந்தை நிறைந்து,
நோயில்லா வாழ்வை அணைந்து ஏகி,
மாயமாம் உலகியல் மனத்தில் தேடுவோம்!

**11.10.2016**



# அரங்கனே அச்சுதா போற்றி போற்றி!

ஏடெடுத்தானை அந்த இனியானை; அரங்கனை,
நாடெடுத்தேற்றும் வல்லோனை, மாலவனை;
பாவெடுத் தேற்றும்படி யெனைப் பணித்தானை,
காடெடுத்துப் பிறந்தானைக் கனிவுடை மாதவனை,
நாடெடுத்தார் நவில்வரே நாராயணா வென்றே!

18-04-2020



# பாவ புண்ணியம்..!

புண்ணியமென்றும்;  பாவமென்றும்;
மண்ணில் ஏதுமில்லை!
கண்ணிய மிக்க வாழ்வுதன்னில்,
இன்னுயிர் தன்னைத் துன்புறுத்தாத,
நன்னிலை வேண்டும்!
ஒன்றையொன்று அழித்தே யுண்ணல் ,
இயன்நிலை யாயினும்,
துன்பம் இழைக்கா நன்னிலை வேண்டும்..!
பசித்தால் மட்டுமே, புசித்தல் செய்வீர்!
ஆகையினால் தான்,
கொன்றால் பாவம் தின்றால் போச்சு!

==0==            22-11-2019

# உன்னையே நீயறிவாய்!



உலகம் பெரியது!
பசிக்குத் தேவை சிறு கவளம் தான்!
பொற்காசுகள் நிறைந்தப் பாலைவனத்தில்,
ஒரு குவளை நீர்தான் உயரியது!
எல்லாப் படைப்புகளுக்கும் பின்னால்,
தேவையும் இருக்கிறது;  தேடலும் இருக்கிறது!
பயன் இல்லாது எப்படைப்புகளும் இல்லை,
பயணம் இல்லாது முடிவுகளும் இல்லை!
மனிதனது,  அறிவும் திறனும் ஏதோ ஒரு நிலையில்;
செயல் படாத போதுதான்,
அவனால் கடவுளை உணர முடியும்!
சைவனாக உணர்ந்து, உள்ளே தேடுங்கள்! **ஒளியை உணருங்கள்**!
அல்லது, வைணவனாக நிறைந்து;
**எங்கும் காணுங்கள்**!,   மகிழ்ந்து திளையுங்கள்!!.  திருச்சிற்றம்பலம்!

==0==  **16-02-2017**

# துணிவு கொள் மனமே!

துணிவுகொள் மனமே! துணிவு கொள்!
அணிகலன் பூண்ட ஆன்ற மனமாய்,
துணிவுகொள் மனமே! துணிவு கொள்!!
வானவில் கோலம் கலையும் முன்னே,



வரிசைச் சொற்களாய் நிறையும் முன்னே,
ஆனந்தக் களிநடம் ஆடும் மனமாய்,
ஏனிந்த உலகம் என்பதை அறிய,
துணிவுகொள் மனமே! துணிவு கொள்!
**11.04.2014**

## அறிவைச் செய்க!



ஒலியாய், ஒளியாய்,
உய்யும் மனதுள்
ஆன்ற மணிவிளக்காய்,

எங்கும் நிறை,
இயன்ற பரம்பொருளாய்,
கருவியாய், காலமாய்,

அறிவின் சுடராய்,
எங்கு நிலைபெறுமோ,
அதுவே இதுவாய்,

இதுவே அதுவாய்
என்றும் நிறைவதுவே!
ஒலியே! ஒளியே! உள்ளொளியே!
ஆணவம் நீக்கி அறிவைச் செய்க!

**29-09-2017**

# வாழுங்கள்!

அன்போடு வாழுங்கால்,
அறிவைக் கொஞ்சம் ஓதுக்குங்கள்;
பண்போடு வாழுங்கால்,
திமிரைக் கொஞ்சம் தவிருங்கள்!
நட்போடு வாழுங்கால்,
பதவி தன்னை மறந்திடுங்கள்!
மனிதனாய் வாழ நினையுங்கால்,
அனைத்தும் இறையே அறிந்திடுங்கள்!

04-10-2018



## தேடுவதெந்நாளோ!

ஒரு பொருள் இருந்து,
ஒரு பொருள் பிறந்து,
உன்னதமாக உலகியல் உழன்று,


தன்வசமாகும் பொருள்கள் யாவும்;
தமதென்றே இருந்து,
இருப்பதும், இருந்ததும்,
இல்லை யென்றாகும் என்பதும் மறந்து,
என்புதோல் உடம்பும் உடையது அல்ல;
என்பதை யுணராது உழலும் மனமே!



சித்தமாய் சத்தியம் சேர்;
நெஞ்சில் நடம் புரியும்,
ஈசனைத் தேடுவதென்னாளோ!

**23-02-2018**

# தெளிக மனமே!



இருப்பதும் இயன்நிலை; இறப்பதும் இயன்நிலை!

வெறுப்பதை நீக்கும் விருப்பம் கொண்டால்,

அறிவும் மனத்தில் அரங்கம் ஏற,
நிறமிலா மனத்தில், இறைவன் ஆட்சி!
இனிய வாழ்வின் உன்னத மாட்சி!!

அன்பே அறிவு! அறமே வாழ்வு!

மண்பதை யாவும் இறைவனின் காட்சி!

அறிந்த மனத்தில் துன்பம் நீங்கி,

கரங்கள் கோத்து வாழ்வினை  உயர்த்தும்!

**24.07.2018**



# பெண்!

பெண்ணெனப் பிறத்தலே இன்பம்!
பெருமைகள் காத்தலே இன்பம்!
கண்ணென நிறைதலே இன்பம்!
கருணையின் வடிவதே பெண்மை!
-வேறு-
அன்னையாய்க் கருவிலே காத்தலால்;
துணைவியாய்க் காதலை வளர்ப்பதால்,
அன்பில்சீர் தங்கையாய்த் தமக்கையாய்,
ஆன்றநல் நட்பின் தோழியாய் அவனியில்
காண்போம் ஆயிரம் உறவுகள் நாளுமே!
-வேறு-
தரணியில்; மாறிடும் வாழ்வியல்,
மருவின்றி; வளர்ந்திட, நாளும்;
அன்னையாய், அனைத்தையும்;
காத்தலே அதனிலும் இன்பம்!
==0==



# பள்ளிக்கூடம்!

அறிவைச் செப்பனிடும்,
ஆனந்தக் கூடம்!
இடர்களைக் களைந்து,
ஈடில்லா நெறிகளை;
உன்னதமாய் அறிந்திட,
ஊன்றிச் சொல்வர்;
எங்களின் ஆசிரியர்!
ஏற்றமிகு கல்வியில்;
ஐயமதை நீக்கியே,
ஒப்பிலா வாழ்வியல்;
ஓங்கிடச் செய்வார்!

—#—-



# அது எது?



கிட்டாத வரையில் அது "கனவு" !
புரியாத வரையில் அது "புதிர்" !
அறியாத வரையில் அது "ஆச்சரியம்" !
தெளியாத வரையில் அது "குழப்பம்" !
தெரியாத வரையில் அது "பொய்" !
உரைக்காத வரையில் அது "சுடுசொல்" !
உணராத வரையில் அது "தொந்திரவு" !
முயலாத வரையில் அது "இயலாமை" !

==0==

# வாழ்வியல்!

துலங்கா அறிவாய் ஞானிகள் சொல்வர்;
விலங்காய் மனிதர் வீணே கழிப்பர்!
கலங்கும் மனதுள் கற்பனை விரியும்;
விளங்கும் பொருளுள் விரும்பித் தேடும்!
அலங்காரச் சொற்கள் அறிவை மயக்கும்!
பளிங்குத் தரையாய் மனதைத் திருத்து;
விளங்கும் மனதுள் உலகியல் மாட்சி!
தளங்கள் அமைத்து வாழ்வினை ஏற்றும்!

==0==



# இயற்கைவளம்!

காலச்சுவட்டில்;
இறைவன் எழுதிய,
இயன்நிலைக் கோலம்!
மூலமும் முடிவும்,
தெரியா வாழ்வில்;
திகழ்ந்திடும் பேரெழில்!
ஆலம்விழுதுகள் அசைந்து,
பாடும் குயில்களின்;
முகவரித் தேடும்!
கோலம் கலைக்கும்,
பிள்ளையாய்; வந்திடும்!
அதுவோர் இயன்நிலை யாகும்!.
**09-10-2019**



# பாட்டிக் கதை!



அன்னையின் உறவு அளவில் பெரியது;
பாட்டி என்பதோ பாசத்தின் பிணைப்பு,
மகளின் மகவோ ,மகனின் மகவோ,
அனுதினம் சொல்லும் ஆயிரம் கதைகள்;
உளவியல் பாடமாய் உன்னதம் கூறும்!

வாழ்வியல் நெறிகளை வகுத்துக் காட்டும்!
நாளைய பொழுதின் கதைகளைத்தேடி,
இன்றே பாட்டியின் இடுப்பைச் சூழும்!
இனியந்தக் காலம் எங்கேக் காண்போம்?
கதைகள்கூறும், பாட்டியரும் இல்லை!

==0==

# பிறப்பு!

அழுகையே வாழ்வின் தொடக்கம்;
ஆற்றலால் காற்றை இழுக்கும்!
இதமெனத் தண்மைக் கரங்கள்;
ஈன்றதாய் மகிழ்வு கொள்ளும்,
உலகையே ஆளப் போகும்;
ஊற்றென உவகைக் கொள்ளும்!
எங்களின் இன்பம் எனவாய்,
ஏனையோர் கையில் ஏந்த,
ஐயிரு திங்கள் கொண்ட துன்பம்;
ஒரு நொடிப் பொழுதில் கழிய,
ஓம் என்றதாம் உலகின் ஓசை!
அன்னையேப் பிறப்பின் முகவரி!

**05-11-2013**



# வாழ்கவே!

அன்பில் குழைந்த;
ஆற்றல் நிறைந்த,
இன்பம் மிகுந்த;
ஈடில்லா நாளை,
உறவும் நட்பும்,
ஊரும் நாடும்;
எவரும் போற்றும்
ஏற்றம் கொண்டு,
ஐம்புலன் காக்கும்
அறிவுச் சுடராய்,
ஒற்றுமை நிறைந்து;
ஓங்கு புகழுடன்,
யாவரும் மகிழ்வுடன்
எந்நாளும் வாழ்கவே!
==#== **23-05-2015**



# தனித்தமிழ்

தனித்தமிழில் எழுதுதற்கே,
தடுமாற்றம் மிகுவதுண்டு!
தனித்தமிழில் பேசுதலைத்,
தலையாய கடனென்போம்!
கனிச்சாறாய்ச் சொற்களையே,
கண்டெடுத்துக் கோத்தாலும்,
தனிச்சொல்லோ, வடமொழியோ,
தடுமாற்றத்தில் மனம்வேகும்!
பிணியில்லைச் சுகமுண்டு;
தனித்தமிழால், தலைநிமிர்வோம்!



==0 == **15-11-2019**

# கனவு!

# வாழ்க்கையில்,
தோற்றுப் போகிறவனின்;
சொர்க்க வாயில்!

#வெற்றி கொள்பவனுக்கு,
விளங்காப் புதிர்!


# ஏழையைக் கூட,
பணக்கார வீட்டுப் பந்தியில்,
உட்கார வைக்கும்!

# தடமில்லாது பயணம் போகும்!
தரித்திரமில்லாச்
சரித்திரம் படைக்கும்!

# நிகழ் காலத்திலேயே,
எதிர்காலத்தை;
எழுதிவைக்கும்! 22-03-1995



# வைகறை!



இயற்கை எழுதிடும்; இனிய காலை!
வெளிச்சம் எழுந்து, அழகைத் தூண்டும்!
முகத்தை வருடும், குளிர்நறுங் காற்று!
கூக்கூவெனக், கூவிடும் புள்ளினம்!
மலர்ந்திட்ட பூக்கள், மகரந்தம் வீசும்!
ஆவின் குரலும், கன்றின் மொழியும்,
இழைந்திடும் ஓசையாய், வண்டுகள் ஒலிப்ப,
ஆயிரம் கரங்களாய்; ஆதவன் எழுந்திடக்,
கட்டியம் கூறும், கனிந்த நற்பொழுதாம்!

==0== 26-12-2016

# மனம்!



கனிந்த மனம் பூவாகும்!
காதல் மனம் தேனாகும்!
துணிந்த மனம் நீராகும்!
தொலைந்த மனம் சேறாகும்!
வளைந்த மனம் இசை பாடும்!
வளர்ந்த மனம் சிறகாகும்!
சிதைந்த மனம் கூராகும்!
சேர்ந்த மனம் தோளாகும்!
சோர்ந்த மனம் போராடும்!

**09.04.2013**

# ஏற்றம் பெறுவோமே!

அழகாகச் சொல்லடுக்கி; ஆரவாரப் பூக்களின்றி,
இழிவான முறையில்லா; ஈடில்லா நிலையணைத்து,
உலகாளும் பெருநிதியை; ஊக்கமாய்க் கைக்கொண்டு,
எதிலுமே சிறப்பென்னும்; ஏற்றத்தை முன்வைத்து,

ஐயிரண்டு விரல்களாலே; ஒற்றுமையைத் துணைக்கழைத்து,
ஓங்காரப் பொருள்வடிவாய்; உலகொளியாய் மனம் கொண்டு,
ஆங்கார மனமின்றி; அதிகாரச் செயலின்றி,
இதயத்தில் அணைத்திட்டால், ஈடில்லாப் பெரும்புகழை;
எந்நாளும் கண்டிங்கு, ஏற்றம் பெறலாமே!

**13-11-2015**



## நூலாசிரியர் குறிப்பு

இந்நூலாசிரியர், இன்றைய திருவாரூர் மாவட்டத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர். நடுவண் அரசில், சென்னையில், இடைநிலை அதிகாரியாகப் பணிபுரிந்து பணிநிறைவு பெற்றுள்ளார். அடிப்படையில், கணித மாணவர்; முதுநிலைப் பயின்றவர். மேலும், கணினிப் பயன் பாட்டியல், வணிக மேலாண்மை, தமிழ் இலக்கியம் ஆகியவற்றில் முதுநிலைப் பட்டத்தோடு, இளநிலைச் சட்டவியலும் பயின்று, தேர்ச்சிப் பெற்றுள்ளார். 'கல்வியில் கரை இல' என்பதாக விளங்குகிறார். எழுத்தும் எனக்கொருப் பிள்ளைதான் என்பார் இவர். இவருக்குச், ஜோதிடக் கலையிலும், ஈடுபாடு உண்டு. இவருக்கு, இதுவும் ஒரு வல்லமையாகத் திகழ்கிறது, எழுத்தாற்றலோடு, பேச்சாற்றலும் கொண்டவர். கவிதையுடன், கதை, கட்டுரை நாடகம் ஆகியவற்றிலும் இவருடைய படைப்புகள் உண்டு.

இவருடைய இசைப்பாடல் தொகுப்பு ஒன்று, "கனவின் ஓசைகள்" எனும் பெயரில் தற்போது, ஒலித்தட்டாக, வெளி வந்துள்ளது. இவர், எளிமையான தோற்றமும், அனைவரிடத்தும், இயல்பாகவும், அன்புடனும் நட்புடனும் பழகும் குணமுடையவர்.

**எழுத்துக்களம்** வெளியீட்டகம்
22, ஆர்.பி. அவின்யூ முதல் தெரு,
செம்பாக்கம், சென்னை - 73
அலைபேசி: 99400 61280
www.ezhuththukkalam.co.in
www.epublish.co.in